
# ஆத்ம ஜோதி




பரம கம்ச யோகானந்தா.



# ஆத்ம ஜோதி

[ ஓர் ஆத்மீக மாத வெளியீடு ]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்

ஜோதி 13 ‖ பிலவ ஞு ஆவணி மீ 1-ந் உ (14-8-61) ‖ சுடர் 10

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | கீதாஞ்சலி | ... 293 |
| 2 | பரம கம்ச யோகானந்தா | ... 295 |
| 3 | சுத்தானந்தரின் கடிதங்கள் | ... 303 |
| 4 | பக்தியின் சிறப்பு | ... 312 |
| 5 | அன்னையின் செயல் | ... 316 |
| 6 | தவஜோதி | ... 317 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

"ஆத்ம ஜோதி நிலையம்" நாவலப்பிட்டி [சிலோன்]


மகாகவி தாகூரின்

# கீதாஞ்சலி

## 7. களைந்து விட்டேன்!

அணிமணி ஆடை யென்னும்
அலங்கிர்தப் பொருளை முற்றும்,
துணிவுடன் களைந்து விட்டேன்;
துளியதிற் கவலை இல்லை!

இனியநின் அந்த ரங்கம்
எதனையும் அறிய வொட்டா;
புனிதநம் உறவில், அன்பிற்
புகின், இவை தடைக ளன்றோ?

பேதையென் காவி யப்புன்
பெருமைகள், நினது பார்வைப்
போதிலே, தலை கவிழ்ந்து
போகுதென் கவிதை மன்னா!

ஓதரு நின் பதத்தில்
உறைந்துளேன்; எனது வாழ்வைத்
தீதில்நேர் குழலாய்ச் செய்துன்
தீஞ்சுவைப் பண்ணிறைப்பாய்!

## 8 வேண்டாம் விலங்கு!

கனத்தபுத் துடை, கைக் காப்பு,
கழுத்துச்சங் கிலிக ளெல்லாம்
தனிச்சுமை; ஓடி யாடும்
தளிர்களுக் கிவை விலங்கே!

" அகத்தானாம் இன்சொலினதே அறம் "

தூசியிற் புரளா வண்ணம்
துணிமணிக் கவலை கொண்டால்,
மாசிலாக் குழந்தை நெஞ்சம்
வாழ்வின்பம் சுவைப்ப துண்டோ?

மண்ணில்தோய்ந் தாடல் அன்றோ,
மதலையர்க் கின்பம்? தூய
அன்னாய்!உன் சேய் எனக்கிஃ ( து )
அருள்;நகை விலங்கு வேண்டாம்!

## 9 சுமப்பதேன்?

உன்னையே உனது தோளில்
சுமப்பதேன்? மதியொன் றில்லாய்!
தன்மனை முன்பு நின்று
தான்பிச்சை கேட்பா றுண்டோ?

அனைத்தையும் சுமப்ப தற்கோர்
அருட்சுமை தாங்கி வைக,
வினையுடல் சுமக்கும் நீ, ஏன்
மேற்சுமைக் கேங்கு கின்றாய்?

சுமைப்பொறுப் பதனை ஏற்கத்
துணிந்தவ னிடத்துன் அல்லற்
சுமையைவிட் டகல்க; பின்னர்
துளியும்நீ திரும்பிப் பாரேல்!

உன்னிரு ளாசை, உன்உள்
ளொளிதனை அவிக்கும்; அன்பாய்த்
தண்ணருட் காதல் நல்கும்
சகலமும்; அதனைப் போற்று!

— "பரமஹம்ஸ தாசன்"

"அகத்து இன்னா வஞ்சரை அஞ்சப்படும்"



# பரம கம்ச யோகானந்தா

— ஆசிரியர் —

இந்தியாவின் கலாச்சாரத்தில் மிக முக்கியமானது குரு சிஷ்ய சம்பந்தமாகும். பரமாத்மாவைத் தேடுதலே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது பாரததேசம். அதற்கு முதல்படி குருசிஷ்ய உறவாகும்.

மேற் கூறப்பட்ட உண்மைக்கு இலக்கிய புருஷராக விளங்குபவர் பரமகம்ச யோகானந்தா அவர்களாகும். அவர்களுடைய வாழ்க்கை அநுபவங்கள் பல சாதகர்களுக்குப் பயன்படும் என்னும் கருத்துக் கொண்டே இதனை வெளியிடுகின்றோம். பல ஆண்டுகளாகப் பண்படுத்தப் பட்ட வாழ்க்கையை உடைய ஞானிகளே இந்தியாவின் அழியாச் செல்வமாக இன்றும் விளங்குகின்றனர். அவர்களுள் இவரும் ஒருவராவர்.

சிறுவயது தொடங்கியே இவருக்குப் பூர்வ ஜென்ம நினைவு உண்டு. இமாலய யோகிகளின் ஞாபகத்திரை அடிக்கடி தோன்றுவதுண்டு. உள்ளத்திலே தோன்றிய காட்சிகளை மற்றையோருக்குச் சொல்லக் கூடிய மொழி அறிவைப் பெறாத சிறுவராக இருந்தார். உணர்ச்சி வசப்படும் போது பலமொழிகளின் கூட்டம் உள்ளத்தே எழும். வங்காள மொழியே காதின் வழியாக உள்ளே சென்ற மொழியாதலின் இவர்உள்ளத்திலிருந்துவெளியானமொழியும் வங்காளமாகும்.

இவர் வடகிழக்கு இந்தியாவிலுள்ள கோராப்பூரில் இமயச் சாரலிலே 1893

"அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்"

ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் தேதி தேதி பிறந்தார். இவர்களில் 4 ஆண்களும் 4 பெண்களும் சகோதரர்களாவர். இவரது பிள்ளைத் திருநாமம் முகுந்தலால் கோஷ் என்பதாகும். இவர், பெற்றோருக்கு 4ஆம் பிள்ளையாகவும் 2ம் ஆண் மகனாகவும் பிறந்தார். இவரது குடும்பம் க்ஷத்திரியவம்சத்தைச் சேர்ந்ததாகும்.

தந்தையார் பெயர் பகவதி சாரன் கோஷ் என்பது. தாயார் ஹிருதயராணி ஆவர். தந்தையார் கணித நிபுணர். தாயார் அன்பே உருவானவர். தாயார் குழந்தைகளுக்கு வேத உபநிஷத் உண்மைகளைக் கதை மூலம் போதிப்பார் இனிய இனிய கதைகள் எல்லாம் கூறுவார். கதைகேட்க என்றே குழந்தைகள் தாயாரையே வட்டமிட்டு இருப்பர். தந்தையார் கண்டிப்பான பேர்வழி. குழந்தைகள் மீது உள்ளூர அன்புடையவர். ஆனால் அதனை வெளிக்குக் காட்டிக் கொள்ள மாட்டார்.

தந்தையார் றெயில்வேயில் உபதலைவராக உத்தியோகம் பார்த்தார். அவரது உத்தியோகத்தில் பெரும்பகுதி பிரயாணத்திலே கழிந்தது. இதனால் பல நகரங்களிலே வசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தாயாரிடம் யார் வந்து எதனைக் கேட்டாலும் அதனை உடனே கொடுத்து விடுவார். தந்தையாரோ கணக்காகத்தான் கொடுப்பார். யார் வந்து எதனைக் கேட்டாலும் முதலில் இல்லையென்றே சொல்லுவார். விஷயத்தைப் பின்பு விளக்கியபின் சந்தோஷமாகக் கொடுப்பார். ஒரு முறை தாயார் ஒருமாத உழைப்பை இரு வாரத்திலேயே தருமம் செய்து விட்டார். அப்போ தந்தையார் தருமத்தைக் கணக்காகச் செய்ய வேண்டும் என்று கூறினார். இந்தக் கண்டிப்பைப் பொறுக்க மாட்டாத தாயார் தான் தனது தந்தையாரிடம் போவதாகச்

''அஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு''



சொல்லி விட்டுப் புறப்பட்டு விட்டார். உடனே தந்தையார் விஷயத்தை விளக்கிச் சமாதானம் செய்தார். இதுதான் அவர்கள் குடும்பத்திலே நிகழ்ந்த ஒரே ஒரு மனஸ்தாபமாகும்

லாகிரிமகாசயர் என்பவர் ஒரு பெரிய மகான் ஆவர். தாயுந் தந்தையும் அவரது சீடர்களானார்கள். முகுந்தன் பிறந்து குழந்தையாய் இருக்கும் போதே லாகிரி மகாசயரிடம் குழந்தையைக் கொண்டு சென்று ஆசீர்வதிக்கச் செய்தார்கள். லாகிரிமகாசயருடைய படம் வீட்டில் உண்டு. முகுந்தன் வளர்ந்ததும் அப்படத்திற்கு முன்பாக இருந்து தியானம் செய்வதுண்டு. தியான நேரத்தில் அப்படமே மனித உருவமாக முகுந்தனுக்குத் தெரிந்து வந்தது. அன்புமிகுதியால் அவ்வுருவைக் கையால் தீண்ட முற்படுவான். அது உடனே படமாகிவிடும். முகுந்தனுக்கு அப்படம் எப்போதும் உயிருள்ள ஞானியாகவே காட்சி கொடுத்தது. முகுந்தனுக்குஎட்டு வயதாக இருக்கும் போது உவாந்திபேதி கண்டு இறக்குந் தறுவாயிலிருந்தான் முகுந்தன். டாக்டர்களும் கைவிட்டு விட்டனர். தாய் லாகிரிமகாசயருடைய படத்தின் முன்னால் கொண்டு சென்று கிடத்தி விட்டாள். குரு அருளினால் குழந்தை பிழைத்து விட்டான். லாகிரி மகாசயர் எச்சாதி, எந்த ஊர், எச்சமயம் என்பது எவருக்குமே தெரியாது. அவர் உலக ஞானியாக விளங்கினார்.

முகுந்தன் ஒருநாள் தியானத்தில் அமர்ந்திருக் போது இமாலய யோகிகளைக் காட்சியிலே கண்டார். நீங்கள் யார்? நாங்கள் இமாலய யோகிகள். நானும் உங்களைப் போல் ஆகவேண்டும். அப்படியே. இது யோகக் காட்சியிலே நடந்த சம்பாஷணையாகும். இதன் பின்னர் இமாலயத்திற்குச் செல்ல வேண்டும் என்ற

''அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்''

அவா முகுந்தனுக்கு மிகுதியும் ஏற்பட்டது. லாகூரில் இருக்கும் போது முகுந்தன் தேவி உபாசனையில் ஈடுபட்டிருந்தார். நிலா முற்றத்தில் ஒருநாள் சகோதரி உமாவுடன் முகுந்தன் இருந்தார். ஆகாயத்தில் மூன்று பட்டங்கள் பறந்து கொண்டிருந்தன. உமா பட்டம் பறக்கும் அழகில் ஈடுபட்டிருந்தாள். அதில் ஒரு பட்டத்தை உமா விரும்பினாள். முகுந்தின் கண்ணை மூடித் தியானத்தில் அமர்ந்தார். ஒருபட்டம் உமாவைநோக்கி வந்து கொண்டிருந்தது. உமா பட்டத்தைப் பெற்ற பின் முகுந்தனின் தெய்வீக அன்னையின் அருளில் உமாவுக்குச் சந்தேகம் உண்டானது. மற்ற இரு பட்டங்களும் கைக்குக் கிடைத்தால் தான் உன் தெய்வீக அன்னையை நம்புவேன் என்றாள். முகுந்தன் மறுபடியும் தியானத்தமர்ந்தார். பட்டங்கள் இரண்டும் முகுந்தனை நோக்கி வந்தன. உமா கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள், மூன்று பட்டங்களும் மறுபடியும் ஆகாயத்தில் பறந்து சென்றன. அன்று தொடக்கம் முகுந்தனை ஒரு தெய்வீகப் பிறவி என்றே நம்பினாள்.

முகுந்தனுக்கு 11 வயதாயிருக்கும்போது தமையனாகிய ஆனந்துக்குத் திருமண ஒழுங்குகள் செய்யத் தாயார் கல்கத்தா சென்றிருந்தார். முகுந்தள் ஒருநாள் இரவு கனவு கண்டார். தாயாருக்குக் கடின வருத்தமென்றும் உடனே தந்தையும் மகனும் புறப்பட்டுவர வேண்டுமென்றும் பிந்தினால் தாயாரைக் காண முடியாதென்றும் கனவு கண்டார். விடிந்து எழுந்ததும் முகுந்தன் கண்ட கனவைக் கூறித் தாயாரைப் பார்க்கப் புறப்படுமாறு தந்தையாரைக் கேட்டார். இது கனவு தானே. தாயாருக்கு ஒன்றுமில்லை. அப்படியானால் தந்தி வரும் தானே. பின்பு பார்த்துக் கொள்வோம் என்றார். அன்று பகல்தந்தி வந்தது.

"அஞ்சுவர் தீவினை என்னுஞ் செருக்கு"



இருவம் உடனேபுறப்பட்டு விட்டனர். இருவரும்போய்ச் சேர்வதற்குள் தாய் இறந்து விட்டார், தாயாரின்திடீர்ப் பிரிவை முகுந்தனால் தாங்க முடியவில்லை. கவலையை மாற்றுதற்காக இமயத்திற்குச் சென்று தனியாக வாழ வேண்டுமென முகுந்தன் விரும்பினார். இதனைச் சிநேகிதன் ஒருவருக்குச் சொன்னார். அச் சிநேகிதன் தமையனாகிய ஆனந்துக்குச் சொல்லிவிட்டான். ஆனந்து வேடிக்கையாகப் பேசினார். இமயம் செல்வதென்றால் கஷாயம் தரிக்க வேண்டுமல்லவா? நீ எங்கே செல்லப் போகின்றாய்? "கஷாயம் தரிக்க வேண்டும்" என்ற வார்த்தை மனதுள் ஆழ்ந்து பதிந்து விட்டது.

தாயார் இறந்து 14 மாதங்கள் ஆகி விட்டன. ஆனந்துக்கு விவாகம் ஆவதற்குச் சில நாட்கள்தான் உள்ளன. முகுந்தனைத் தனிமையில் அழைத்து அம்மா ஒரு இரகசியம் இறக்கும் போது சொன்னார். அதனைச் சொல்ல வேண்டிய காலம் வந்து விட்டது. கவனமாகக் கேள். முகுந்தன் கையிலே ஒரு சிறு வெள்ளிப் பெட்டியைக் கொடுத்துப் பின்வரும் விஷயத்தைத் தாயின் கூற்றாகவே சொல்லுகின்றார் ஆனந்து.

''நீ பிறந்து சிறு குழந்தையாக இருக்கும் போது நான் உன்னை எனது குருநாதர் லாகிரி மகரிஷியிடம் கொண்டு சென்றேன். அவர் உன்னை வாங்கித் தனதுதொடையிலே சிறிதுநேரம் வைத்தார். உனது நெற்றியிலே கையை வைத்து ஆசீர்வதித்தார். தாயே! இவன் ஒரு யோகியாக விளங்குவான். இது ஒரு ஆத்ம ஞான யந்திரம். இந்த யந்திரம் பல ஆத்மாக்களை ஆண்டவனிடத்திலே இழுத்துச் செல்லும். இத்தனையும் குருநாதர் சொல்லி முடிந்த உடனே உனது முகத்தில் ஒளி ஒன்று, பரவக் கண்டேன். உன் மூத்த சகோதரியும் உடனிருந்து கண்டாள். அன்றிருந்து நீ ஒரு யோகியாவாய் என்பது எனக்குத் தெரியும். நாங்கள் பஞ்சாப்பில் இருக்கும் போது எங்கள் வீட்டுக்கு ஒரு ஞானி வந்தார். அம்மா நீ கெதியில் விடுதலை பெறவேண்டும்

"அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்"

என்பது ஞானிகள் விருப்பம் என்றார். இந்த வெள்ளிப் பெட்டி உன்னிடம் இருக்க வேண்டும். அதை இப்போ தர மாட்டேன். நீ நாளைக்காலை தியானத்தில் இருக்கும் போது தானாகவே வந்து சேரும். நீ இறக்கும் வரை இதைப்பற்றி எவரிடமும் கூறக்கூடாது. இறக்கும்போது ஆனந்திடம் கொடுத்து நீ இறந்து ஒரு வருடத்தின்பின் முகுந்தனிடம் சேர்க்குமாறு கூறு. அது ஏன் என்பதை முகுந்தன் அறிவார். அவ் வெள்ளிப் பெட்டியே அவனுக்கு ஞான மார்க்கத்திற்கு வழிகாட்டியாகும். முகுந்தன் பூரண ஞானம் பெற்றபின் அது தானாகவே மறைந்து விடும்.''

வெள்ளிப்பெட்டி முகுந்தன் கையில் கிடைத்ததும் முகுந்தன் ஆனந்த பரவச நிலை அடைந்தான். தந்தையாரின் அனுமதியுடன் முகுந்தன் காசிக்குச் சென்றார். தந்தையாரின் அறிமுகக்கடிதம் ஒன்றைக் கேதார்நாத பாபுவுக்குக் கொண்டு சென்றார். அங்குக் கடிதம் கொடுக்கு முன்பே நீ பகவதியின் மகன் தானே என்று சுவாமிகள் வரவேற்றார். அன்று தொடக்கம் பல சாதுக்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஒவ்வொரு சாதுவினிடத்திலும் ஒவ்வொருவகையான அநுபவங்களைப் பெற்றார். முகுந்தன் ஒருநாள் தியானத்தில் அமர்ந்திருக்கும் போது அவ்வறை முழுவதும் ஒளியால் நிரம்பி வழிவதைக் கண்டார். அவ்வொளியின் நடுவே பராசக்தியின் திருவுருவைத் தரிசித்தார். தேவியின் தரிசனம் கிடைத்தபின் தட்சிணேஸ்வரம் காளிகோயிலுக்குச் சென்று தேவியைத் தரிசித்தார்.

தயானந்தருடைய ஆச்சிரமத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார். ஆச்சிரமத்திலுள்ள சீடர்களுக்கு முகுந்தன் மேல் ஒருவித பொறாமை ஏற்பட்டது. அதனால் தயானந்தர் இல்லாத நேரத்தில் பலவித துன்பங்களை அநுபவிக்க நேர்ந்தது. ஒருநாள் வெள்ளிப் பெட்டியில் என்ன இருக்கிறது என்பதைப் பார்க்க ஆசைகொண்டார். பெட்டியைத் திறந்தார். பெட்டியினுள் ஒன்றும்



காணப் படவில்லை. பெட்டியும் கையைவிட்டு மறைந்து விட்டது. ஒருநாள் தயானந்தருடைய சீடர்களுடன் காய்கறி வாங்கிவர முகுந்தன் கடை வீதிக்குச் சென்றார். காய்கறி வாங்கிவரும்போது ஒரு சந்தில் சாது ஒருவர் நிற்பதைக் கண்டார். சாதுவுக்குக் கிட்டவந்ததும் கால்கள் அங்கு இங்கு அசைக்கமுடியாமல்போய்விட்டது காய்கறிக்கூடையை உடன் வந்தவரிடம் கொடுத்துவிட்டுச் சாதுவை நோக்கிச் சென்றார். அவர்தான் ஸ்ரீயுக்தேஸ்வரர் ஆவார். காந்தத்தினால் இழுபட்டுச் செல்லும் இரும்புபோல் யுக்தேஸ்வரர் பக்கமாக முகுந்தன் இழுக்கப் பெற்றார். சாஷ்டாங்கமாக விழுந்துவணங்கிக் குருதேவா என்று உரத்துக் கூவினார், முகுந்தன். எனது ஆச்சிரமும் நானும் எல்லாம் உனதே என்றார், யுக்தேஸ்வரர். கடவுளைக் காண்பதும் ஞானம் பெறுவதுமே எனது நோக்கம். அதுவே தங்கள்நோக்கமுமாயின் தங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளுகின்றேன் என்றார் முகுந்தன். உடனே குருநாதர் ''நான் எனது எல்லையற்ற நிபந்தனையற்ற அன்பைச் சொரிகிறேன்'' என்று ஆசீர்வதித்தார்.

முகுந்தனின் போக்கு அண்ணனாகிய ஆனந்துவுக்குப் பிடிக்கவில்லை. முதலில் பணம் சம்பாதிக்க வேண்டும் அதற்குமேல்தான் கடவுளைப் பற்றிய நினைவு என்பது ஆனந்துவின் கட்சியாகும். முதலில் கடவுள் அதற்குமேல்தான் பணம் என்பது முகுந்தனின் கட்சியாகும். ஆனந்தா முகுந்தனை இவ்விஷயத்தில் பரிசோதனை ஒன்று நடத்தினார். கையில்பணம்இல்லாமலும், வேறுயாரிடமும்தமது கஷ்டத்தைச்சொல்லாமலும் முகுந்தன் கல்கத்தாவிலிருந்து பிருந்தாவனம் சென்று திரும்ப வேண்டும் என்பது ஆனந்தாவின் ஏற்பாடாகும். முகுந்தன் அதற்குச் சம்மதித்து அதில் வெற்றியும் கண்டார், உடனே ஆனந்தா முகுந்தனின் முதலாவது சீடரானார். முகுந்தனிடம் உபதேசம் பெற்று கிரியாயோகம் அநுட்டிக்கத் தொடங்கினார். குருதேவருடைய அநுமதிப்படி முகுந்தன் உயர்தரக் கல்வியை முடித்தார். முகுந்தன் தான் பெற்ற இன்பம் மற்றையோரும் பெறவேண்

"அரியர் அவையகத்து அஞ்சாதவர்"

'' அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் ''

டும் என்ற கருத்தால் இராஞ்சி சமவெளியில் யோகப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார்.

1914ஆம் ஆண்டு யூலாய் மாதம் குருநாதரிடமிருந்து முகுந்தன் சந்நியாசம் ஏற்றுக் கொண்டார். அன்று தொடக்கம் யோகானந்தா என்ற பெயரால் அழைக்கப் பட்டார். 1920ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குப் பிரயாணமாகி அங்கு 5 ஆண்டுகள் பிரச்சாரம் செய்தார். 1925 ஆம் ஆண்டு தமது தலைமை ஸ்தாபனத்தைஅமெரிக்காவிலேயே அமைத்துக் கொண்டார். 1935இல் மறுபடியும் இந்தியாவந்து ஐரோப்பிய நாடுகளுக்குச்சென்றார். 1936 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் குருநாதர் மகா சமாதி அடைந்தார். 1937 தொடக்கம் 1951 வரை அமெரிக்காவில் கிரியாயோகத்தைப்பற்றிய பிரச்சாரம் வெகுமும்முரமாக நடை பெற்றது. இம்மகானுடைய முகத்தோற்றமே இம் மாத ஆத்ம ஜோதியின் முகப்பை அழகு படுத்துகின்றது.

ராதையின் காதல்

( அரிய ஓரங்க நாடகம் )

நூலாசிரியர்:— ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி

மொழிபெயர்ப்பாளர்:— திரு. கி. வானமாமலை

விலை: 1 ரூபா

கிடைக்குமிடம்:-

ஸ்ரீ சிவானந்த ஆச்சிரமம்

ரிஷிகேசம், இமயமலை, இந்தியா.

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்"



சுத்தானந்தரின்

# கடிதங்கள் 13

கன்யாகுமாரி முனை

அன்புள்ள சகோதரருக்கு வணக்கம்.

குமரிமுனைக்குஎல்லாரும் நடந்து வந்தோம். வந்ததும் ஓடினோம் சமுத்திரத்திற்கு. ஆ! அகண்டமான இந்துசமுத்திரம்; ஆயிரம் நூற்றாண்டுகளாக நமது தமிழ்க் கப்பல்கள் ஊர்ந்து செல்வக்குவை பொழிந்த சமுத்திரம், எங்கள் எதிரே அலைவீசி நிற்கிறது! அதன் கரையில் குமரிதேவி நமக்குப் பாதுகாவலாயிருக்கிறாள்; 'தாயே! நீ இங்கே காவலாயிருந்தும் எமது நாடு அன்னியருக்கு அடிமைப் பட்டதென்னே! நீ தவத்திற் கண்மூடியதால் அன்னியர் அஞ்சாது வந்து நாட்டைப் பற்றினேரோ? இல்லை, ஒருவேளை நாங்கள் உறங்கியதாலோ? இப்போது நாங்கள் சுதந்திர தாகத்துடன் விழித்துக்கொண்டோம்! அம்மா! நீயும்விழித்தெழுந்து, எங்களுக்கு வழிகாட்டு, என்ற பொருளில் நான் பாடினேன். பஜனை நடந்தது. எங்கள் பக்தியை மெச்சி, கோயில் மணியகாரர் "இங்கே, சாப்பிடலாம்" என்றார். எல்லாரும் குமரிபூஜை பார்த்துவிட்டு, அங்கேயே பிர்சாதம் சாப்பிட்டோம்.

பிரமசாரிகளை நான் சுதந்திரமாக ஊரைச் சுற்றிவர அனுப்பி, நாளெல்லாம் அம்மன் சந்நிதியில் தியானம் செய்தேன். இரவில் நல்ல பௌர்ணமி நிலா; சமுத்திரம் அகண்ட ஓங்காரத்துடன் ஆனந்த நடம்புரிந்தது! பிரமசாரிகள் ஒன்பது மணிவரையில் அந்தக் காட்சியை அனுபவித்து ஜாகைக்குச்

" அருளற்றார் அற்றார் மற்றாதல் அரிது "

சென்று உறங்கினார்கள். நான் சமுத்திரத்தையே இரவெல்லாம் பார்த்து அதையே எல்லையற்ற பரப்பிரம்ம சொரூபமாகத் தியானித்தேன். என்னுள் கவியலையெழுந்து ஒரு தியானக்காட்சியுடன் கர்ஜித்தது; "திருக்காட்சி" என்ற காவியமாக அதைச் செய்திருக்கிறேன். தாங்கள் பார்க்க வேண்டும்!

பிறகு, எண்ணங்களின்மேல் எண்ணங்கள் வந்து மோதின முதன்மையான எண்ணம், நமது பாரததேசமும் மனிதசமுதாயமும்சுத்தசுதந்தரசமத்துவஆத்மநேயத்துடன்வாழவேண்டும் என்பதுதான்இப்போதுகிளம்பியிருக்கும்குருகுல விவாதங்களையும்தேவியிடம் முறையிட்டேன்; நல்லஸ்தாபனம் சமயலறைச் சண்டையால் அழியாதிருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டேன். என்னமோ, எனக்கு இவை சிறுபிள்ளை விளையாட்டாயிருக்கிறது. அகண்டாத்ம திருஷ்டியால் பார்த்தால், 'அவன் அவள், அவர், இவர், அது, எல்லாம் சுத்தான்ம சைதன்யமயம், எல்லாம்சிவமயம். சாதிமதக் கட்டுப்பாடுகளே குறுகிய நோக்கமுள்ளன. அவை இயற்கையில் இல்லை. பஞ்சபூதங்களும் சூரிய சந்திரரும், காடு மலை ஆறு கடல்களும் எல்லாருக்கும் பொது. அவற்றை ஒழுங்காக சமதர்சனத்துடன் அவரவர் தேவையறிந்து கையாண்டால், மனிதன் போட்டி பொறாமையில்லாமல் உண்ண, உடுக்க, இருக்க, கற்க வேண்டிய வசதிகளை எளிதாக அடையலாம். மனிதனுக்குப் பிராமணன், கிறிஸ்துவன், இஸ்லாமியன், இன்னொரு சாதிமதத்தான் என்ற பிரிவுணர்ச்சி வராமல், நான் மனிதன் அவனும் மனிதன்; நான்யாரோ, அவனே அவன், என்ற ஏகரதஅத்வைஸ பாவனை வரவேண்டும். அப்போது 'அவன் வேறுசாதி; நாமேன் அவனுக்கு உதவி செய்ய வேண்டும்? என்ற பட்சபாதமிராது. ஒவ்வொருவனும் உலகாலயத்தின் பக்தனாகத் தன்னை நினைப்பான்; எல்லா உயிர்களையும் ஆன்மத்தொகுதிகளையும் தெய்வ

"அருளாட்சி ஆங்கில்லை ஊன்தின்பவர்க்கு"



சைதன்யமூர்த்தியாக நினைப்பான். இதுதான் ஆத்மநேசம் என்பது. நாமெல்லாரும் ஒரே ஆத்மநேசர் சங்கமாக வேண்டும். சட்டை, மொட்டை, குடுமி, பூணூல்களெல்லாம் நாமாக ஆக்கிக்கொண்ட கோலங்கள். பூணூலில்லாமல் நான் தியான சமாதி செய்யவில்லையா? வெளிவேஷங்களில் அழுத்தம் செய்யக்கூடாது. தாங்கள் நினைக்கும் துவிஜசமஸ்காரங்கூட விவாதத்திற்கிடமாகும். நாமெல்லாரும்ஸமஸ்காரங்களேயில்லாமல், நேராகப் 'பரமாத்ம சக்தி மைந்தர்களாகயிருக்லாகாதா? அந்தர்யாமி எல்லாருள்ளும்ஏகரஸமாயிருக்கிறான். மனதை உள்ளே குவித்து தியானத்தால் அவனைக் கலந்து இன்புற எல்லாருக்கும் உரிமையுண்டு. இந்த உரிமையை அறியாமல், தம்மையறியாமல், தாமே பிறர் என்றறியாமல் நம்மவர் பகையாடிக்கொண்டிருப்பது, பிரித்தாளும் அன்னியருக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. அவர்கள் இந்த நாட்டார் ஐதிக வைதீக சாதிமதச் சிக்கல்களில் அகப்பட்டு, ஒருவரோடொருவர் கலந்து வாழத்தெரியாமல் பிரிந்து வாழ்கிறார்கள். நமக்கு நல்ல வேட்டைதான். நாம் பிரிவினையைத் தூண்டிவிட்டால் சுதந்திரத்தின் வேகம் குறைந்துபோகும் நாடு நமக்கு எப்போதும் அடிமையாயிருக்கும் என்று நினைக்கிறார்கள். சாதி, மதம், கட்சி, வகுப்புவேறுபாடுகள் நம்மைப் பிரித்துப் பகையாடவும், பிறர் நம்மை நகையாடவும் செய்கின்றன இந்நிலைதான் நமக்குப் பரமசத்துருவாகும். பாரத தருமத்தை நன்றாக அநுஷ்டித்தால் நாடுமட்டுமன்று உலகமே அந்தராத்ம ஐக்கியத்துடன் அகண்டசமரஸத்தில் ஒருகுலமாக வாழமுடியும். பலமானஒற்றுமை, வீரதீர பராக்கிரமம், காலத்திற் கேற்ற நல்ல கல்வி, பிழைப்பிற்கு நல்ல தொழில், சன்மார்க்க ஒழுக்கம், கலைப்பயிற்சி—இவையே நமது முன்னேற்றத்திற்குரிய சாதனங்களாகும்.

"அருள் கெடுத்து அல்லல் உழப்பிக்குஞ் சூது"

பழைய ரிஷிகள் விதித்த பிரம்மசரிய கிருஹஸ்த தரும ங்களை நாம் அனுஷ்டிக்கலாம். பிரமசரியம்தான் நமது வாழ் வின் அடிப்படையாகும். பிரம்மசரியத்திற்கு அடையாளம் பூணூலன்று, பிச்சையன்று. பழைய வேதங்களை ஓதுதல்கூட இனிப் பொதுவழியாகாது. அத்யாத்ம அனுஷ்டானம், அறிவு வளர்ச்சி, யோகப்பயிற்சி, உடல்மனவுறுதி, இந்திரிய ஜயம், தற்கால உலகை ஆளத்தக்க வீறுபடைத்த சக்தி, உழைத்துப் பிழைக்க ஒரு நல்ல தொழில், வீட்டிற்கும், நாட்டிற்கும், உலக த்திற்கும் காலத்திற்கேற்ற சேவை செய்யும் வினைத்திட்டம் இவையேபிரமசரியக்கல்வியின்ஆதாரசங்கங்களாகும். இவற்றை யெல்லாம் பயிற்றத் தக்க ஆசிரியர்களை முதலில் உண்டாக்க வேண்டும். உயர்ந்த கல்வி ஒழுக்கம், கொள்கை, தியாகம், அத் யாத்ம சித்தி இவற்றைப் பெற்ற யோகிகளே இப்படிப்பட்ட ஆசாரியர்களாகயிருக்கத் தகுதியுள்ளவர்கள். அவர்களுடன் வசிப்பதே, பிரமசாரிகளுக்குக் கல்வியுடன் தூயவாழ்வும் நல்கும்.

வருங்காலத்தில் வாழ்க்கையின் போட்டி அதிகமாகும். இருபாலாரும் சமவுரிமை கொண்டாடுவார்கள். ஆதலால் ஆண்பெண் இருவருக்குமே பிரமசரியக்கல்வி வேண்டும். ஆண் களுக்கு ஆண் ஆசிரியர், பெண்களுக்குப் பெண் ஆசிரியைகளைப் பயிற்ற வேண்டும். இருவருக்கும் தனித்தனியாக பிரமசரிய குருகுலமும் கன்யா குருகுலமும் அமைக்க வேண்டும். பனி ரெண்டு வயது வரையில் இருபாலரும் ஒன்றாகக் கற்கலாம். அதற்குமேல் இருபாலாரும் பிரமசரிய அனுஷ்டானங்களில் திடமாயிருந்தாலொழிய வயதின் தூண்டுதல்களை அடக்கிக் கொள்ள முடியாது. அவர்கள் தனித்தனியேயிருப்பது நல்லது. ஆனால் பிரமசரிய அனுஷ்டான்ங்கள் உறுதி பெற்ற பிறகு, காலக்கிரமத்தில் மாணவ மாணவிகள் ஒன்றாக வித்தியாப்பியா

அழிவின் கண் அல்லல் உலப்பதாகும்



சம் செய்யும் காலம் வரலாம். இப்போது சமுதாயம் இதற் குத் தயாராயில்லையென்றே தெரிகிறது. மனித சுபாவமே புதிய மாறுதல் அடையவேண்டும்.

குருகுலம், கன்யாகுலம், இரண்டுமே நகரிலிருந்து மூன்று மைலாவது தள்ளி, இயற்கையழகும், நல்ல காற்றும், தண் ணீர் வசதியும் கூடியதாயிருக்க வேண்டும். செந்தமிழ் அகஸ் தியர் வசித்த மலையைக் கண்டதும் அங்கே குருகுலம் அமை க்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு உண்டானது. காவேரி, பொருனை நதிக்கரைகளில் குருகுலத்திற்கு ஏராளமான வசதி களிருக்கின்றன. நமக்குக் கிடைத்திருக்கும் நிலமும் பரவாயி ல்லை; இன்னும் ஆற்றிற்குச் சமீபமாக இருந்தால் உத்தமம்.

குருகுல அமைப்பில் தற்காலம் அமோகமாக வளர்ந்திரு க்கும் சிறப்பு அற்புதங்களையும் நாம் மறக்க முடியாது. முற்கால நூல்களில் நமக்கு ஆத்மீக சம்பந்தமானவை தான் மிச்சம். மற்றக்கலை நூல்களெல்லாம் தற்காலம் பொங்கிப் பெருகும் கலைநூல்களுடன் நிற்க முடியாது. உதாரணமாக எண்சுவடி யையும், லீலாவதி, கணிதத்தையுமே வைத்துக்கொண்டு நாம் தற்காலத்தில் அதிசயமாக வளர்ந்திருக்கும் கணிதம் பீஜகணி தம் க்ஷேத்ரகணிதம் இயந்திர கணிதங்களுக்கு ஈடுசெய்ய முடியாது. முற்கால வாகடங்களைக் கொண்டு தற்கால உடல் நூல் வைத்திய சாஸ்திரங்களை நாம் புறக்கணிக்க முடியாது. நமது சமுதாயம் சென்ற ஐநூறாண்டுகளாக அன்னியப்படை யெடுப்புகளால் அபிவிருத்தியில்லாமலே நசித்துப் போயிருக் கிறது. ஐரோப்பியர்கள் உலகை வென்று ஆளும் வீறு பெற்று தம்மைப் பல வழிகளிலும் நிபுணர்களாகச் செய்துகொண்டி ருக்கிறார்கள். ஆகையால் நமது குருகுலக்கல்வி தற்காலக்கலை விஞ்ஞானம் இவற்றைப்பூரணமாகத் தரவேண்டும்.இக்காலக் கல்விமுறையில் உலகளாவிய நோக்கமே முதன்மையாகும்.

அறத்தினூங்கு ஆக்கம் எவனே உயிர்க்கு

மேல்நாட்டார்காலத்திற்கேற்றபடிகற்கிறார்கள். கேம்ப்பிரிட்ஜ் கல்லூரியிலிருந்து வரும் வாலிபன் இந்தியாவை, கனடாவை ஆஸ்திரெலியாவை நிர்வகித்துத் தாய்நாட்டின் கௌரவத்தையும் சம்பத்தையும் காக்கும் வீறு பெற்றிருக்கிறான். அந்த நிலையை நமது கல்விமுறைகள் இன்னும் எட்டியே பார்க்கவில்லை நம்முன் ஓர் உலகம் முன்னேறிக்கொண்டிருக்கிறது. அதில் பலநாட்டார் தமது திறமைகளை அசாத்தியமாக வளர்த்து ஒருவரையொருவர் மிஞ்சப் போட்டி போடுகிறார்கள். இந்தப்போட்டியில் நாமும் கலந்து தீரர்களாக காலவேகத்தை எதிர்த்து வென்று அசல் மனிதர்களாகத் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும். இதற்கேற்ற கல்விமுறையை நாம் வகுக்க வேண்டும்.

(1) மூன்று முதல் ஆறு வயது வரையில் குழந்தைக் கல்வி, எண் எழுத்துக்களை ஆடல் பாடல்களாகப் பயிற்றலாம். குழந்தைகளுக்கு நல்லொழுக்கம், சுத்தமான பேச்சு நாட்டன்பு, தங்கள் உடலையும் நடையையும் காக்குந் திறமைகளைப் பயிற்ற வேண்டும். இளம் வயதில் பிடிபட்ட நல்லொழுக்கம் நீடித்திருக்கும். உண்மை பேசுதல், பொய்தவிர்த்தல், திருடாமை, பிறரை எள்ளாமை, பொறாமையின்மை, ஒருவருக்கொருவர் உதவியாக இருத்தல் முதலிய பழக்கங்களை இந்த வயதிலேயே பயிற்ற வேண்டும். 'எல்லாரும் மனிதஜாதி, எல்லாருக்கும் ஒரே கடவுள், ஒரே உலகம், ஒரே மனச்சாட்சி, ஒரே சத்திய சன்மார்க்கம் என்ற ஒருமைப்பாடு' மாணவருக்கு இயற்கையாக வர வேண்டும்

(2) ஆறாவது வயதில் குழந்தைகள் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படிப்பார்கள். அவர்களுக்கு, தாய்மொழி, இந்தி, ஆங்கிலம், நமதுப்பழைய ஆத்மீக ஞானத்தை அறியப் போதிய சம்ஸ்கிருதம் ஆகிய நான்கு பாஷைகளைத் தர வேண்டும். நார்வே, ஜர்மனி, ருஷ்யா முதலிய தேசங்களில் நான்கு பாஷைகள் கற்பிக்கிறார்கள். நமது மாணவ மாணவிகளுக்கும் நாட்டிற்கேற்ற நான்கு மொழிகள் அவசியம் வேண்

அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒன்று



டும். ஒன்பது வயது வரையில் தமிழ் இந்தி இரண்டும் கற்றுப் பிறகு ஆங்கிலத்தில் கருத்தூன்றலாம். ஆத்மீகக் கல்வியும் புகட்ட வேண்டும். வேதம், உபநிஷதம் இரண்டின் சாரமும் கீதையில் உள்ளது. அத்துடன் ஈசம், கேனம், கடம், தைத்திரியம், பிருஹதாரண்யம் ஆகிய உபநிஷத்துக்களையும், சங்கரரின் அற்புத மணிவாக்குகளையும் நன்றாகப் படித்தாலே வேதக் கல்வியின் பயனை அடையலாம். மற்றொரு இந்திய தத்துவ சாத்திரமான சித்தாந்தம் அற்புதமானது. மெய்கண்டபோதம், தேவார திருவாசகங்கள், தாயுமானவர், வள்ளலார், திருவாய்மொழி முதலிய அருட்சுரங்கங்களிலிருந்து, எந்தச் சாதிமதத்திற்கும் முரணில்லாமல் சைவ — வைஷ்ணவ — சமண — பௌத்த தூஷணைகளில்லாமல் பொதுவான வரிகளைத் தேர்ந்தெடுத்து, ஒரு புதிய பொது மறை வகுத்து மாணவர்களுக்கு இசையுடன் கற்பித்தல் வேண்டும். திருக்குறளை ஒவ்வொருவரும் பைபிள் போலப் படிக்க வேண்டும். வேதம், ஸ்மிருதி எல்லாம் அதில் அடக்கம். ஆத்மீகக் கல்விக்கு இவ்வளவு போதும். சமுஸ்கிரதத்தில் சாதாரணமாகக் கீதை, காளிதாசன் முதலிய நூல்களை அறிந்து கொள்ளும் அறிவு போதும்.

தமிழ், நமது நாட்டின் ஆதிபாஷை; அது இன்னும் இளமையுடன் உள்ளது. அதை உச்சநிலைக்கு ஏற்றி உலகம் மதிக்கச் செய்ய வேண்டும். வங்கம், இந்தி பாஷைகள் போல் தமிழுக்கும், உலகில் மதிப்பும் கௌரவமும் உண்டாக வேண்டும். ஆதலால் நமது முழுக்கவனமும் தமிழில் ஊன்றலாம். தற்காலத்தில் உலகில் வழங்கும் கலைகளையெல்லாம் தமிழில் கொண்டுவரவேண்டும். ஆங்கிலத்திற்குச் சமானமாகத் தமிழை உயர்த்த வேண்டும். வடக்கும் தெற்கும் கூடிக்குலாவி, "நாம் எல்லாரும் பாரத மக்கள்" என்ற உணர்ச்சியுடன் வாழ இந்தி பாஷை அத்யாவசியமாகும். அதிலும் நம்மவர் நிபுணர்களாகயிருக்க வேண்டும்.

"அறிவு அகற்றும் ஆகலூழ் உற்றக்கடை"

உலகபாஷை ஆங்கிலம். அதை நாம் பரிபூரணமாகக் கற்க வேண்டும். முதன்மையாக ஆங்கிலத்தில் குவிந்துகிடக்கும் பல துறைக்கலைகளை நம்மவர் ஆராய்ந்து காலத்திற்கு ஏற்ற தொழில்களை நடத்தத் திறமை பெறவேண்டும். வெறும் காதல் விதைகளையும் கற்பனைகளையுமே மிகைப்படுத்தாமல், அறிவு வளர்ச்சிக்கேற்ற தற்கால பூத பௌதிகக் கலைகளைப் பயில வேண்டும். ஒவ்வொரு தமிழனும் ஒரு கலாவீரனாக வேண்டும். தக்கமாணவர்களை ஐரோப்பா அமெரிக்காக் கண்டங்களுக்கு அனுப்பி, கலைப்பயிற்சி பெற்றுவந்து நமது நாட்டிலும் அக்கலையை வளர்க்கச் செய்ய வேண்டும். ஜப்பான் இப்படித்தான் முன்னுக்கு வந்து வல்லரசாக விளங்குகின்றது. நமது நாட்டிற்குரிய ஆத்மீக ஞானத்தையும் யோகத்தையும் அடிப்படையாகக் கொண்டு தற்காலக்கலையுலகம் வியக்கும்படியான தமிழ் மாளிகையை நாம் அமைக்க வேண்டும்.

குருகுலத்தில் காலத்திற்கேற்ற தொழில்கள் ஏராளமாக நடக்க வேண்டும். தொழில் நிபுணர்களை நாம் வரவேற்று வேண்டிய சௌகரியங்கள் தந்து, மாணவருக்குத் தொழில் பயிற்றச் சொல்ல வேண்டும்

இக் கல்விமுறையுடன் காலையும் மாலையும் ஆக இரண்டு மணி நேரம் மாணவர் ஹடாசனம், பிராணாயாமம், தாரணை தியானம், ஸம்யமம் ஆகிய யோகாப்பியாசங்களைச் செய்ய வேண்டும். பிரமசரிய சித்திக்கு யோகமே வழி. அதனால் சித்த சுத்தியும் தேஜசும் ஒஜசும் பெருகி, ஏகசந்தக்கிராஹ்யமும் அருட்புலமையும் உண்டாகும். அப்போது ஓர் ஆண்டிற் கற்பதை, மாணவர் ஒரு மாதத்திற் கற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு மாணவனும் காயத்ரிப்ராணாயாமம் நாளைக்கு இருபது முப்பது செய்யவேண்டும். பூணூலைவிட இது அவசியமகும்

உணவு விஷயத்தில் நாம் மிகவும் கவனமாகயிருக்க வேண்டும். அன்னமயம் ப்ராணமயம். உடல் நலத்திற்காக மாதம் இரண்டு நாள் உபவாசமிருக்கலாம். மற்ற நாட்களில் புஷ்டியான ஆகாரம் சாப்பிட வேண்டும். பால், பழம், கடலை

" அறிவறிந்து ஆள்வினை இன்மை பழி "



காய்கறிகள், நவதானியங்கள், நெய், தயிர் இவை உணவில் அவசியம் சேரவேண்டும், ஓடியாடி உழைத்து நல்லபசியுடன் நாம் உண்டால், நோய் வராது. நமக்கு வேண்டியது சுத்தம். சுத்தமாக சுசிருசியாக யார் சமைத்தாலும் உண்ணலாம். உணவு தயாரிப்பதில் சாதிமத வித்தியாசமில்லாமல், ஆசிரியர், மாணவர் எல்லாரும் முறைவைத்துக் கலந்து சேவை செய்து, கலந்துண்டால், இப்போது நம்மைச் சூழ்ந்த வீண் சச்சரவிற்கே இடமிராது. பழைய மாமூல்களையெல்லாம் உடைத்தெறிந்து, முன்னேறும் காலவெள்ளத்தில், நாம் ஜீவப்படகை, பொதுஜன திருப்தி என்கின்ற துடுப்பைக் கொண்டுதான் நடத்த வேண்டியிருக்கிறது.

இந்த அகண்ட சமுத்திரம், எனக்குத் தூண்டிய எண்ணங்களிற் சிலவற்றை இங்கே எழுதினேன். மற்றவை திருக்காட்சியில் வருகின்றன. நீண்ட கடிதம் எழுதிவிட்டேன். இக்கொள்கைகளை நேரே நாம் விவாதித்து நியாயம் காண்போம்.

எல்லா உலகும் இனியதொரு வீடாகி
எல்லாரும் ஓர்குலமாய் என்றென்றும் — எல்லாரும்
கல்வியுந் தொழிலும் கலையும் பயின்றுண்மைச்
செல்வராய் வாழ்க செழித்து!

பண்டை முனிவர் பகரும் அருட்கலையும்
எண்டிசையும் போற்றும் இயற்கலையும்—கொண்டுநிதம்
இன்றுலகை வெல்லும் இணையற்ற தீரர்களாய்
நன்றுபொலி வோம்வாரீர் நாம்!

இங்கிருந்து திருவாங்கூர், முடிந்தால் வைக்கம் வரையில் பிரமசாரிகள் செல்ல விரும்புகிறார்கள். இருபது நாட்களில் முடிந்தமட்டும் சுற்றிப் பார்த்துவருகிறேன். திருவனந்தபுரம் சென்றதும் பணத்துடன் கடிதம் எழுதுகிறேன்.

தங்கள் அன்புள்ள தம்பி......

" அறிவிலார் என்னுடையரேனும் இலர் "

# பக்தியின் சிறப்பு

(சுவாமி அபேதாநந்தா)

தங்களை மிகவும் தாழ்ந்தவர்களாக, புல்லினும் கடையவர்களாக மதித்து, பகவானைத் தங்களுக்கு அன்னியமல்லாத நிலையில் தங்கள் உள்ளத்திலே தரிசித்து, பகவானுக்குத் தொண்டு செய்து வழிபட்டு வந்த இரு பக்தர்களின் பக்திச் சிறப்பை விளக்கும் ஒரு சம்பவம் வருமாறு:-

அக்பரது தலைநகரில் அன்று ஒரே கோலாகலம். திரள் திரளாக மக்கள் அரண்மனையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். இராஜ வீதியில் ஒரு ஊர்வலம் செல்கிறது. இந்த வரவேற்பு யாருக்கு? மற்றோர் அரசனுக்கோ அல்லது நாடு பல வெற்றி கண்ட வீரருக்கோ இல்லை. இவற்றுக்கெல்லாம் மேலாக, பகவானையே தங்களுடைய அடிமையாகக் கொண்ட இரு பக்தர்களுக்குத்தான் இந்தக் கோலாகலமான வரவேற்பு. சக்கரவர்த்தி அக்பரே எதிர் கொண்டு அழைத்துச் செல்லும் அந்தப் பக்தர்கள் யார்? அவர்கள்தான் துளஸிதாசரும் சூர்தாசரும் ஆவர். இம் மகான்களுடைய பிரேமை பக்தியைப் பற்றிக் கேள்வியுற்ற மன்னர், அவர்களைத் தரிசிக்க ஆவல் கொண்டு இந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஊர்வலம் அரண்மனையை நோக்கிச் சென்று கொண்டிருந்த பொழுது கூட்டத்தில் திடீரென்று சலசலப்பு. என்ன நடந்தது? ஊர்வலத்தின் முன் சென்று கொண்டிருந்த யானை கூட்டத்தையும், அந்த ஆரவாரத்தையும் கண்டு மிரண்டு மதம்

''அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு''



பிடித்து கூட்டத்தில் புகுந்து ஓட ஆரம்பித்தது. மக்கள் அதைக் கண்டு அஞ்சி நாலா பக்கமும் சிதறி ஓட ஆரம்பித்தனர். பக்தர் சூர்தாஸரும் அந்த யானையைக் கண்டு பயந்து மக்களுடன் ஓடி ஒரு மூலையில் ஒளிந்து கொண்டார். ஆனால் துளசிதாஸரோ அப்படிப் பயந்து ஓடவில்லை. மாறாக நேர் நிமிர்ந்து நின்று அந்த யானையைத் தைரியத்துடன் உற்று நோக்கினார். வெறி பிடித்து ஓடி வந்த யானை அவர்முன் வந்தவுடன் நின்று அவரைச் சிறிது நேரம் உற்று நோக்கிய பிறகு திரும்பி ஓட ஆரம்பித்தது. இதைக் கண்ட அக்பர் சக்கரவர்த்திக்கு துளசிதாஸரைப் பற்றிய மதிப்பு உயர்ந்து விட்டது. 'இவரல்லவோ உண்மை பக்தன்; தன் உயிரையும் பொருட்படுத்தாமல் வந்த ஆபத்தை எதிர்த்து நின்ற இவரல்லவோ பெரிய மகான்! மற்ற சாதாரண மக்களைப் போல் தன் உயிருக்குப் பயந்து எங்கோ ஓடி ஒளிந்து கொண்ட அந்த சூர்தாஸரைப் போய் பெரிய பக்தன் என்று கருதி ஏமாந்தல்லவோ போய்விட்டோம்! பலரைப் போல் இந்த சூர்தாஸரும் ஒரு போலிச் சாமியார் தான் போலிருக்கிறது. பெரிய பக்தன் போல் நடிக்கும் ஒரு வேஷதாரி, பித்தலாட்டக்காரன்' என்றெல்லாம் மிகக் கேவலமாகக் கருதினார். ஆனாலும் அழைத்து வந்த மரியாதைக்காக சூர்தாஸருக்கும் சில வெகுமதிகளை அளிக்க இருவரும் விடைபெற்றுச் சென்று விட்டனர்.

சூர்தாஸரைப் பற்றி மன்னர் தன் மந்திரியிடம் மிகவும் கேவலமாகப் பேசி, துளசிதாஸரே மிகவும் பெரிய மஹான் என்று தன் எண்ணத்தை வெளியிட்டார். மந்திரி மிகவும் புத்திசாலி. பலராலும் பெரிய பக்தர் என்று கருதப்படும் சூர்தாஸர் அவ்விதம் ஓடி ஒளிந்ததற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று எண்ணினார். மன்னர் தீர விசாரியாமல் தான் கண்டதைக் கொண்டு அவ்விதம் தாழ்வாகப் பேசியது மந்திரிக்குப் பொறுக்கவில்லை. அதனால் அவர் மன்னரிடம் இவ்வளவு விரைவில் நாம் ஒரு முடிவுக்கு வருவது தவறு. இவர்கள் இருவரில் யார் பெரிய பக்தர் என்பதைத் தீர்மானிக்க நமக்கு அருகதை இல்லை. பக்தி என்றால் என்ன என்பதையே அறியாத நமக்கு பக்தனுடைய செயல்களுக்கு விளக்கம் கூற இயலாது. உலக மக்களை மதிப்பிடுவதைப் போல் அவர்களையும் கருதுவது மிகவும் தவறு. அதனால் மற்றொரு பெரிய பக்தரிடம் சென்று இவர்களுடைய பெருமையைப் பற்றி அறிவதே சிறந்தது என்று கூறினார். மன்னரும் அதற்கு

''ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு''

இசைந்தார். இவர்களைப் பற்றிய அபிப்பிராயம் கூறத் தகுதியுடைய பக்தர் யார் இருக்கிறார்கள், என்ற பிரச்சினை எழுந்தது மன்னருக்கு. அதற்கும் மந்திரி வழிகாட்டினார். மீராதேவி சிறந்த பக்தை என்பதில் மன்னருக்கு ஏதாவது அபிப்பிராய பேதம் உண்டா என்று வினவினார். அக்பரும் அதில் தனக்கு சிறிதும் சந்தேகமில்லை என்று கூறவே தங்கள் கேள்விக்கு விடைகாண அன்னை மீராதேவியை அணுகினார்கள். இதைக் கேட்ட மீராதேவி சிரித்துக்கொண்டே 'நீங்கள் என்ன முடிவு செய்தீர்கள்' என்று கேட்டார். மன்னர் உடனே துளசிதாஸர் பெரிய மஹான் என்று தான் கருதுவதாகப் பகர்ந்தார். இதைக் கேட்டு மீராதேவி, சூர்தாஸர் மிகப் பெரிய பக்தர் என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை. உண்மையில் கூறப்போனால் மேற் கூறிய சம்பவம் சூர்தாஸர் தம்மை எப்படி புல்லினும் கடையவனாக, மிகத் தாழ்ந்தவனாகக் கருதுகிறார் என்பதையே காட்டுவதாகப் பகர்ந்தார். மன்னனுக்கு இந்த முடிவு புரியவில்லை. அதனால் சூர்தாஸருடைய செய்கைக்கு விளக்கம் கூறுமாறு கேட்டுக் கொண்டார். மீராதேவியும் சிரித்துக் கொண்டே 'சூர்தாஸர் யாரை வழிபடுகிறார்? பால கிருஷ்ணனை அல்லவா? அவர் இதயத்தில் சதா குடி கொண்டிருப்பவர் குழந்தை கண்ணன் அன்றோ? அவர் சிந்தனை பூராவையும் ஆக்ரமித்துக் கொண்டிருப்பவன் அந்தக் குழந்தை கிருஷ்ணன் அல்லவா? அதனால் தான் அவர் யானை ஆவேசத்துடன் ஓடி வருவதைக் கண்டவுடன் எங்கே தன்னுள்ளத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் பால முகுந்தனை அந்த யானை மிதித்து விடுமோ, அந்தத் தளிர் உடலை யானையின் தந்தங்கள் குத்திக் கிழித்து விடுமோ என்று பயந்து அவனை ஆபத்திலிருந்து காப்பாற்ற ஓடி ஒளிந்து கொண்டார். ஆனால் துளசிதாஸர் வழிபடுவது பால ராமன் அல்ல; கோதண்டராமன் ஆகும். வில்லேந்திய ராமன் தன் உள்ளத்தில் வீற்றிருக்க அவர் அச்சமடையக் காரணம் இல்லை. என் உள்ளத்தில் ராமன் இருக்க இந்த யானை என்னை என்ன செய்து விட முடியும் என்ற பெருமிதத்துடன் அவர் நிமிர்ந்து நின்றார். அவர் அருகில் ஓடி வந்த யானை யாரைக் கண்டது? துளசிதாஸரையல்ல. அந்தக் கோதண்டராமனைத்தான். அதனால்தான் அது எதிர்க்காமல் திரும்பிச் சென்றது. ஆக துளசிதாஸரிடமாவது சிறிது ஆணவம் இருந்தது. ஆனால் சூர்தாஸரோ அஹந்தை என்பது கிஞ்சித்தேனும் இல்லாமல். தாய் குழந்தையைக் காப்பாற்ற ஓடுவது போல் தன் குழந்தை கண்ணனைக் காப்பாற்ற, ஓடி

"ஆதி பகவன் முதற்றே உலகு"



ஒளிந்து கொண்டார்" என்று பகர்ந்தார். இதைக் கேட்ட மன்னன் கண்களில் கண்ணீர் வடிய, தான் எவ்வளவு முட்டாள்தனமாக, ஒரு விநாடியில், அவ்வளவு பெரிய பக்தரைத் தவறாகப் புரிந்து கொண்டு கேவலமாகப் பேசி விட்டோம் என்று வருந்தினார்.

இப்படித்தான் நாம் இந்த உலகத்தில் பல விஷயங்களைப் பற்றி தவறாக முடிவு செய்து விடுகிறோம். நம் கண்களால் கண்டுவிட்டால் அதில் தவறே இருக்க முடியாது என்று நினைத்து விடுகிறோம். ஆனால் இந்த ஊனக் கண் நம்மை ஏமாற்றி விடும். அது இல்லாததை இருப்பதாகவும், மெய்யைப் பொய்யாகவும் காட்டி விடும். அதனால் அந்தக் கண் காட்டுவதை நம்பித் தவறாக முடிவு செய்து, அதைப் பேசித் திரிவது மிகவும் பாபமாகும். இந்தத் தவறைப் பக்தனால் ஒரு பொழுதும் செய்ய முடியாது. பக்தன் தன் ஊனக் கண் காண்பதை நம்புவதில்லை. அதற்கு அப்பால் உள்ள உண்மையையே உணருகிறான். அதனால் தான் 'பிறரிடம் குற்றம் காணாதவன் பக்தன்' என்று கீதையில் கண்ணன் நமக்கு வழி காட்டுகிறார். பகவான் எப்படிப் பக்தனுக்கு அடிமையாகிறான் என்றும் கீதையின் இன் சொற்களிலே காணலாம். ஞானி இந்த லௌகீக துக்கத்திலிருந்து விடுபட்டுத் தனக்கு முக்தி வேண்டும் என்று பாடுபடுகிறான். ஆனால் பக்தனுக்கோ தன்னைப் பற்றிய எண்ணமே இல்லை. அவன் தன் சுகத்திற்காகப் பகவானிடம் அன்பு செலுத்துவதில்லை. பகவான் சுகத்திற்காகவே வாழ்கிறான். தன் பிரிய பகவானுக்கு எவ்வித துன்பம் ஏற்படுவதையும் பக்தனது உள்ளம் சகிக்காது. அவன் சிந்தனை முழுவதும் பகவானது சுகத்தை நாடுவதிலேயே ஈடுபடுகிறது. அதனால் பகவான் பக்தனுக்கு அடிமையாகி விடுகிறான். பக்தன் பகவானைத் தன் அன்பு என்னும் கயிற்றால் கட்டி' பகவானுடைய இன்பத்தை, சுகத்தைக் கருதும் நிலையில்தான் பெரியாழ்வார் பகவானுக்குப் பல்லாண்டு பாடுகிறார். சூர்தாஸரும் தன் உள்ளத்தில் விளையாடும் பாலகிருஷ்ணனுக்கு யானையினால் துன்பம் ஏற்படுமே என்று வருந்தி ஓடி ஒளிந்து கொள்ளுகிறார். பக்தனது அன்பு உள்ளம் தன் சுகத்தைத் துறந்து விடுகிறது. மற்றவர்களுடைய சுகத்திலேயே அதாவது மற்றவர்களுக்குக் காரணமாக உள்ள, சாட்சியாக உள்ள, அந்தப் பகவானுடைய இன்பத்தையே நாடுகிறது. இதுவே உண்மைத் துறவாகும்.

அன்பு! அமைதி! இன்பம்!

"ஆறாதே நாவினால் சுட்ட வடு"

உ

# அன்னையின் செயல்

( சங்கீதபூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி )

காரிருளில் தனியாக அமர்ந்து நான்
கைப்பொருள் பற்றி ஆலோசித்திட்டேன்
ஊரிலுள்ளோர்க ளுறங்கிவிட்டா ரெந்தன்
உள்ளக்கண் மெல்லத் திறந்த தம்மா

ஓரொளி தோன்றிய தச்சமயம் உடன்
எங்கும் நிறைந்திட்ட சக்தி வந்தாள்
ஊர்பே ருனக்கில்லை ஈதுண்மை நீயுணர்
யாவுமென் மாய வடிவே யென்றாள்

போதுமுன் மாயம் பிரிந்திட வேண்டாம்நீ
போகவிடே னெனக் கால் பிடித்தேன்
ஏது சுமையு மெடுக்காது நீவிடு
என்றும் பிரியேனென்றே மறைந்தாள்

சின்னஞ் சிறிய குழந்தையாய் வருவாள்
சிரித் தெந்தனை மயக்கிடுவாள்
பென்னம் பெரிய புதுமைகள் காட்டுவாள்
பேசா திருந்திடச் செய்திடுவாள்

கன்னிகையாய் வந்து காலத்தினைச் சொல்வாள்
காணாத இன்பங்கள் காட்டிடுவாள்
அன்னை வடிவாக வந்தன்பைச் சொரிவாள்
ஆரறிவா ரவள் செய்கை யம்மா

எல்லா மளித்திடு மன்னைக்கு ஈந்திட
என்னிடத்தே பொருள் ஒன்றுமில்லை
கல்லாத என்மனத்தை யீயலா மென்றால்
காட்சி தரவே அமர்ந்து கொண்டாள்

காயமே வேருய்த் தெரியும்நிலை தந்து
கண்டிடு வாயிற் கதவை யென்றாள்
மாயத்தாற் பின்காலம் உண்டென மறைத்து
மாய உலகையே காட்டுகிறாள்

" இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் "



# தவஜோதி

செல்வி. கோமதி சுப்பையா

கல் தோன்றி மண் தோன்றாக் காலந் தோன்றிய சைவ சமய விருட்சத்திற்கு நீரூற்றி, எருவிட்டுத், தழைக்கச் செய்து, பாதுகாத்த பெருமை சமயகுரவர் சந்தான குரவரையே சாரும். சைவசமயத்தின் வழியைக் குரு சீட கிரமமாக விளக்கிக் காட்டுபவர் சந்தான குரவர். சமய குரவரைப் போலவே இவரும் நால்வராவர். மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியார் ஆகிய நான்கு சந்தான குரவர்களும் சைவசமயம் என்னும் கோயிலுக்கு மிகப் பெரிய ஆதாரம் அளித்துச் சொண்டிருக்கும் பழம் பெரும் தூண்கள். இவர்கள் மெய்கண்டசாஸ்த்திரங்களைஇயற்றியுள்ளனர் இந் நால்வருள் மிகக் கூடிய தொகையை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார். மெய்கண்ட சாஸ்த்திரம் பதினான்கனுள் உமாபதியார் இயற்றியவை எட்டு. உமாபதி சிவாசாரியார் தில்லை வாழந்தணர்களுள் ஒருவர். இவர் சிதம்பரத்துக் கொற்றங்குடியில் வசித்தமையால் கொற்றங்குடி முதலியார் எனப் பட்டார். தமிழிற் பெரும் புலமை வாய்ந்த இவர், வேதசிவாகமங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த சிவபக்த சிகாமணி.

ஒருநாள் இவர் திருத் தில்லைப் பதியின் சிவகாமி

''இல்லை, ஒழுக்கம் இலான்கண் உயர்வு''

நேசராம் நடராச வள்ளலைத் திருவுள்ளத்திலே நிறுத்தி அத் திருக்காட்சியிலே திளைத்து திருவீதி வழியே திரும்பும் போது, தீவர்த்தி முதலாம் விருதுகளோடு பல்லக்கில் சென்றார். இதைக் கண்ட திருப்பெண்ணாகடம் மறைஞான சம்பந்த சுவாமிகள், பட்டப் பகலிலே தீவர்த்தியுடன் போவதைக் கண்டு, அருகேயிருந்தவர்களிடம், "பட்ட கட்டையிற் பகற் குருடன் போகின்றான், பாருங்கள்'' என்று குறிப்பாகக் கூறினார். இதைக் கேட்டார் பல்லக்கில் அமர்ந்திருந்த உமாபதியார். பலர் முன்னிலையில் தன்னை அவமதித்த குற்றத்திற்காக அவரை வழக்கு மன்றத்திற்கு இழுக்கவில்லை. மனம் வெதும்பவில்லை. வெகுண்டெழவில்லை. மாறாக, நிதானத்தோடு, நிறை மனத்தோடு பல்லக்கை விட்டிறங்கினார். தெருவென்றும் பாராது அவரது திருவடிகளிலே சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். தன்னைச் சீடராக ஏற்று நல்லறிவு புகட்டி, பேரறிவுப் பரம்பொருளாம் பேருண்மையைப் புகுத்தும் வண்ணம் வேண்டி நின்றார்.

இறைவனின் திருவருளை ஏற்கெனவே பெற்றிருந்த மறைஞான சம்பந்தர், உலகைச் சூழ்ந்திருக்கும் அந்தகார இருளை நீக்க இன்னுமொரு பெருந்தவஜோதி பிறக்கப் போகிறது என்ற பேராவலுடன் அதனை உருவாக்கும் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொண்டார். அதுவும் வளர்ந்து பேரொளியைத் தந்தது.

உமாபதியார் வாழ்விலே திருவருள் எவ்வளவு தூரம் நிறைந்திருக்கிறது என்பது அவர் வாழ்க்கையை அறிந்தவர்களுக்கு வெள்ளிடைமலை.

இவர் இற்றைக்கு அறுநூறு வருடங்களுக்கு முற்பட்டவர். இவ்வுலக மக்களை எவ்வாறு காற்று சூழ்ந்திருக்கி

"இழப்பினும் பிற்பயக்கும் நற்பாலவை''



றதோ அது போல அவரைத் திருவருள் சூழ்ந்திருக்கிறது. நம்மெல்லோரையும் அந்தக் காற்றோடு சேர்ந்து திருவருளும் கலந்திருக்கிறது. கருணை வள்ளலாம் கைலாயநாதன் நம் மூச்சுக்காற்றோடு சேர்ந்தாவது தன் திருவருள் நம்மைச் சேரட்டும் என்று காற்றாகி நிற்கிறார். இருந்தாலும் நாம் அவரை அசட்டை செய்துவிட்டு அறியாமை என்ற அந்த காரத்தில்தான் அமிழ்ந்துவோம் என்று ஆணவத்தோடு அரற்றுகின்றோம்.

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்;
சலமிலன் பேர் சங்கரன்'' அல்லவா அவன்!

வழிபடுதலால் விருப்பமேனும் வழிபடாமையால் வெறுப்பேனும் இல்லாதவன். ஆனால் அவனை நண்ணாதவர் அவன் அருளை அறிய மாட்டார்கள். அவனை நண்ணியவர்களோ அவன் அருளை நன்கு அறிந்து அவன் திருவருளும் திருவடியுமே தஞ்சமென, மதுவில் மயங்கும் மதுகரம்போல, தெவிட்டாத திருவருட்தேனிலே தியங்கிக் கிடப்பர். உமாபதியார் அந்தத் திருவருளை உணர்ந்து அதுவே தன் மூச்சாகி வாழ்கிறார். இது மேற் கூறிய குறளிலிருந்து நன்கு விளங்கும். இதை அவரே தன் திருவருட் பயனிலே கூறியருளியிருக்கிறார்.

ஆம்! அவரிடம் திருவருள் விளங்கியதென்பதை அவருடைய வாழ்க்கை வரலாறு எப்படித் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது பாருங்கள். இவருக்குப் பெற்றான் சாம்பான் என்பவன் தினந்தோறும் விறகு கொடுத்து வந்தான். அந்தப் பெற்றான் சாம்பான் பணத்தின் பொருட்டு விறகு கொடுக்காது இவர் மீது அவனுக்கிருந்த அன்பினாலும் முத்தியடைய வேண்டுமென்ற ஆவாவின் பேரிலுமே இவர்

"இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்''

அறியாது அவருக்கு விறகு கொடுத்து வந்தான். ஒருநாள் கடும் மழை பெய்யவே பெற்றான் சாம்பானுக்கு வர முடியவில்லை. விறகு இல்லாமையால் சமையல் தாமதித்தது. என்னவென்று காரணம் வினாவிய உமாபதிக்குக் கிடைத்த பதில் இதுதான். அடுத்த நாள் காலையில் எழுந்து ஸ்நானம் செய்து அம்பலத்தரசனை வணங்கச் சென்ற உமாபதியைத் திருப்படியின் மீது கிடந்த ஒரு சீட்டு எதிர்கொண்டழைத்தது. அதை எடுத்தார்; படித்தார். பெற்றான் சாம்பான் என்னும் சிவபக்த சிரோமணிக்குச் சபாநாயகரது, ''அடியாற் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங் குடியாற் கெழுதிய கைச் சீட்டுப் படியின் மிசைப் பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து முத்தி கொடுக்கை முறை'' என்று கண்டிருந்தது. ஆண்டவன் ஆணையிலிருந்து அணுவளவும் அகலாத அடியார் அதற்கு அக்கணமே அடிபணிந்தார். பெற்றான் சாம்பான் முக்தியடைந்தான்! விளைவு? பெற்றான் சாம்பானின் மனைவி தன் கணவனை இவர் கொன்றுவிட்டார் என அரசனிடம் சென்று முறையிட்டாள். அரசனும் அதை உண்மையென்றெண்ணி அவரிடம் சென்று விசாரித்தார். அவர் கூறியபடி முக்தி கொடுத்தாராயின், தம் கண்முன் ஏதாவதொரு பொருளுக்குமுக்தி கொடுத்தால் நம்புவோம் என்றனர். பக்கத்திலே நின்றது ஒரு முள்ளிச்செடி. திருவருளின் தன்மையை உணராதது அல்ல, பேரருளின் தன்மையை நன்குணர்ந்து அந்த ஞானத்தால் நன்கு பரிபக்குவமடைந்திருந்தது அது! அறிவற்ற அரசனும் ஆத்திரமடைந்த மனைவியும் பார்த்துக் கொண்டு நின்றனர். உமாபதியார் தன் திரு விழிகளை அதன் மீது திருப்பினார். அவருடைய திருக்கரங்களை அதனிடத்தே கொண்டு சென்றார். அதோ! அவரது அருள் நோக்கும் மேனியின் ஸ்பரிசமும் பட்ட மாத்திரத்தே முள்ளிச்செடி எல்லோரும் காண எம்

''இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி''



பெருமானோடு இரண்டறக் கலந்தது. என்னே உமாபதியின் திருவருள்!

இதோ அதையே விளக்க இன்னுமொரு சந்தர்ப்பம்! மார்கழி மாதத்திலே திருவிழா நடந்து கொண்டிருக்கிறது. திருவிழாவிலே கொடி ஏற்றம் நடக்கப் போகிறது. எல்லோரும் எம்பிரானது அருள் பெற ஏங்கி நிற்கின்றனர். அந்நேரம். அந்தோ! கொடி ஏறமாட்டேன்கிறதே! இறைவனின் இல்லத்திலே, அவனுக்காக நடக்கும் விசேஷத்திலே ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது போலும்! பக்தர்களெல்லோரும் கொடிமரத்தையே பார்த்துக் கொண்டு வாய் பேச எழாது நிற்கின்றனர். என்னென்னவோ செய்தும் கொடி மட்டும் ஏற மறுக்கிறது. ''என்ன சோதனையோ'' என்று அடியார் அகம் நெகிழ்ந்து கண்ணீர் பெருக்கி நிற்கின்றனர். என்ன செய்ய வேண்டுமென்று ஒருவருக்கும் புரியவில்லை. கூட்டத்திலிருந்து எழுகிறது ஒரு குரல். கணீரென்ற அந்தக் குரலிலிருந்து கொடிக்கவியொன்று' புனையப்பட்டு பிரபந்தமாக வெளிப்பட்டு ஏறாது நின்ற கொடியை அப்படியே ஏற்றி விட்டது. என்னே அற்புதம்! எல்லோர் வதனத்திலும் மகிழ்ச்சி! ஆனந்தம்!! சந்தோஷம் கரைபுரண்டோட இறைவனை எல்லோரும் பாடி ஆனந்தக் களிப்பெய்தினர் அடியார்கள். அப்படி, ஏறாத கொடியை ஏற்றிய குரலின் பெருமை யாரைச் சேரும். அகில அண்டத்தையும் தன்னுள் அடக்கும் அந்த அம்மையையும் அப்பனையுமே தன்னுள் அடக்கும் அந்த உமாபதியைத்தான்!

தில்லையிலே தில்லைவாழந்தணர்களுடைய பாடல்களெல்லாம் அரங்கேற்றமாகின்றன. எல்லாம் அரங்கேற்றமாகி விட்டது என்றெண்ணி சபை கலையப் போகிறது. அப்பொழுது ஒரு அசரீரி எழுந்தது. எல்லோரும் அமைதி

''இனத்தானும் இன்னான் எனப்படுஞ் சொல்''

யாகக் கேட்டனர். "நான் உமாபதியார் பேடகத்துள் இருக்கிறேன்". இதுதான் கேட்ட அசரீரி. உடனே எல்லோரும் ஓடிச் சென்று உமாபதியாரின் பேடகத்தைத் திறந்து பார்த்தனர். அங்கே அவர் இயற்றிய சிதம்பர மான்மியத்துள் ஒன்றாகிய **கோயிற் புராணம்** எழுந்தருளியிருந்தது. அன்பர்கள் அதை எடுத்து வந்து அரங்கேற்றினார்கள். என்னே! உமாபதி சிவாசாரியாரின் பெருமை! என்னே அடியார்க்கெளியன் அன்பர்கள் மீதுபொழியும் அருள்மழை!

இவரைச் சீடராகக் கொண்ட மறைஞான சம்பந்தர் இவரது அதி தீவிர பக்குவத்தை உலகினர்க்கு எடுத்துக்காட்டக் கருதினார். ஒருநாள் புடவை நெய்பவர் வீதியை அடைந்து அங்கே வசிப்பவர்களிடம் கூழ் வாங்கி உண்டார். உடனே அவர் அருகிலிருந்த உமாபதியார், அவர் கையிலிருந்து முழங்கை வழியே ஒழுகிய சேடத்தை இரு கைகளாலும் ஏந்தி உண்டார். இதைக் கண்ட அம் மக்கள் அவரைப் பழித்தனர். அவர் கீழ் மக்களிடம் கூழ் வாங்கி உண்டார் என்றும் அதனால் இவர் தில்லைஅம்பலவனைத் தரிசிக்கக் கோயிலினுட் செல்லக் கூடாதென்றும் அவரைத் தடுத்தனர். இறைவன் இவர் பக்கம் இருக்கும்போது அவர்களெல்லோரும் என்ன செய்துவிட முடியும்?

இவ்வுலகில் ஊனக் கண் குருடர் ஒரு சிலர். ஆனால் ஞானக் கண் குருடர் அனந்தம். ஊனக் கண் மிக நன்றாய்த் தெரிபவர்களின் மனம் கூட மிகவும் இருட்டாய் இருக்கும். ஈரமும், இருட்டும், அழுக்கும் உள்ள இடத்தில்தான் காளான்கள் முளைக்கும். அதேபோல் ஆணவம் என்னும் அழுக்கும் அறியாமை என்ற இருட்டும், மோகம் என்ற ஈரமும் இருக்

"இனந்தூயார்க்கு இல்லை நன்றாகா வினை"



கும் வரைக்கும் அங்கு காளான்கள்தான் முளைக்கும். அந்த அழுக்கைப் போக்கி அந்த இடத்தில் சூரிய ஒளியைப் புக விட்டாலோ காளான்கள் ஒரே நொடியில் இருந்த இடம் தெரியாமல் ஒழிந்து விடும். அதே போல நம் மனமாகிய மண்ணிலே முளைத்திருக்கும் காளான்களைப் போக்க அந்த மனத்திலே வெளிச்சம் பரப்ப வேண்டும். சைவப் பெரியார் பலர் இதற்கு ஏற்ற விளக்குகளைத் தயாரித்துத் தந்திருக்கிறார்கள். முன்பு கூறியது போல உமாபதி சிவாசாரியார் என்னும் பேரொளி இருக்கும்போது, அந்தப் பேரொளி இயற்றிய அரும் ஜோதிகள் இருக்கும்போது, காளான்களை மட்டுமென்ன, கற்பாறைகளையே அகற்றி விடலாம்.

அடுத்த இதழில் முடிவடையும்,

# முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா

# சமேத

# ஸ்ரீமுன்னநாதசுவாமி மஹோத்ஸவ

# விஞ்ஞாபனம்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 29-7-61 | சனிக்கிழமை |
| சிவனடியார் திருவிழா | 20-8-61 | ஞாயிற்றுக்கிழமை |
| பிக்ஷாடனர் திருவிழா | 21-8-61 | திங்கட்கிழமை |
| நடேசர் திருவிழா | 22-8-61 | செவ்வாய்க்கிழமை |
| வேட்டைத் திருவிழா | 23-8-61 | புதன்கிழமை |
| தேர்த்திருவிழா | 24-8-61 | வியாழக்கிழமை |
| தீர்த்தத் திருவிழா | 25-8-61 | வெள்ளிக்கிழமை |

"இன்மையின் இன்மையே இன்னாதன"

## முக்கிய அறிவித்தல்

திங்கள் ஒரு முறை இலங்கையில் ( சிலோன் ) மலரும் செந்தமிழ் இதழ் தமிழின்பம். அருமையான அட்டையுடனும் பல்சுவைப்பகுதிகளுடனும் அன்பர் போற்ற இரண்டாவது ஆண்டாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் எங்கும் விற்பனையாகிறது:—

# தமிழின்பம்

முக்கியமாக மலாயா, பர்மா, தென்னுபிரிக்கா அன்பர்களுக்கு இந்த முக்கிய அறிவித்தல். தமிழின்பம் விற்பனை செய்யத் தகுதியான ஏஜண்டுகள் மேற்படி பகுதிகளில் தேவை. மாதிரிப் பிரதிகளுக்கு ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் எழுதுக:

**தமிழின்பம்**

**161, செட்டியார் தெரு,**

**கொழும்பு 11**

இலங்கை ( சிலோன் )


# ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்கம்

# வெள்ளிவிழா நாமலிகித ஜெபம்

### யூலாய் மாதம் முடிய உள்ள கணக்குவிபரம்

| | | |
|---|---|---|
| சென்ற மாதக் கணக்கு | | 21150624 |
| பருத்தித்துறை | | 11776 |
| நாவலப்பிட்டி | | 4000 |
| பண்டாரவளை | | 1500 |
| வெள்ளவத்தை | | 12954 |
| பதுளை | | 11600 |
| கட்டுவன் | | 34800 |
| லேன்ஸ்டவுன் | | 133730 |
| நல்லூர் | | 20460 |
| திமிலைத்தீவு | | 9280 |
| மத்துகமப்பட்டினம் | | 108606 |
| சென் ஜோட்ஜ், தோட்டம் | | 14000 |
| மதுகெதறத்தோட்டம் | | 13760 |
| கீக்கிஞக்கந்த | ,, | 3000 |
| மத்துகம | ,, | 8320 |
| இலப்பந்துறப் பட்டினம் | | 3960 |
| பாந்திய தோட்டம் | | 2000 |
| கல்வயல் | | 1800 |
| டம்பாரைத்தோட்டம் | | 6897 |
| நாகெனித் தோட்டம் | | 6000 |
| கொழும்பு | | 8080 |
| கற்றன் | | 1326 |
| நோட்டன் | கிரிவான்எலியா | 64638 |
| ஸ்ரீகந்துற | தோட்டம் | 13540 |
| டெனிஸ்ரன் | ,, | 2000 |
| இலப்பந்துற | தோட்டம் | 6000 |
| பள்ளக்கொட | | 2240 |
| டெனியாயா | | 3000 |
| மூதூர் | | 26604 |
| மதுரை | | 5800 |
| உடுப்பிட்டி | | 10000 |
| உசன் | | 7760 |
| இயக்கச்சி | | 23000 |
| களுவாஞ்சிக்குடி | | 4150 |
| தபோவனம் | கண்டி | 5040 |
| ஊரெழு | | 9000 |
| பன்வில | | 3000 |
| புலோலி | | 2000 |
| திரிகோணமலை | | 2025000 |
| | மொத்தம் | 23781245 |

Registered at the G. P. O. as a Newspaper M. L. 59,300


## வாய்வு சூரணம்.

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கைகால்அசதி பிடிப்பு, பசியின்மை. வயிற்று வலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

உபயோகிக்கும் முறை:—

இந்தச் சூரணத்தில் அரை தோலா அளவு எடுத்து அத்துடன் அரை தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும். காலை மாலை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக்-கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய், நிறையச்சாப்பிடலாம். வாரம் ஒருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

மூலிகையினுல் தயாரிக்கப் பெற்றது.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4ரூபா 25சதம்

[பத்தியமில்லை]

சம்பு இன்டஸ்ரீஸ் — சேலம்—2 (S. I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி.

மலாயாவில் கிடைக்குமிடம்:-

மு. கணபதி அன் கம்பெனி,
66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ

---

மகரிஷி சுத்தானந்தரின் அரிய நூல்கள்!

| | |
|---|---|
| திருமந்திர விளக்கம் | 1.25 |
| நமது சமய விளக்கம் | .25 |
| இன்பத் திருப்புகழ் | .50 |
| ஞானமாலை | .50 |
| கதிர்காம மாலை | .15 |

வியாபாரிகளுக்குத் தக்க கழிவு தரப்படும். மற்றும் அரிய சமய, இலக்கியத் தமிழ் நூல்களும் இங்கே கிடைக்கும்.

சக்தி அன் கொ.,
35, கொத்மலி வீதி, — நாவலப்பிட்டி.


Printed & Published by Mr. N. Muthiah. Athmajothi Nilayam Nawalapitiya.
at ATHMAJOTHI PRESS. NAWALAPITIYA. (Ceylon) 14-8-61